சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.

அசல் வழக்கு எண். **306/2019**

பி.வா.சா.**3**-காசிமாயன், நாள் **- 13.03.2024.**

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததா என்றால் இல்லை. பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதால் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் உறவினர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள், வாதிக்கு எழுதிக்கொடுத்த ஈடுகடன் பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் செய்யவில்லை. வாதிக்கு, பிரதிவாதிகள் எவ்வளவு ரூபாய்க்கு ஈடுகடன் எடுத்திக்கொடுத்தார்கள் என்றால் ரூ.5 லட்சத்திற்கு எழுதிக்கொடுத்தார்கள். பிரதிவாதிகள், வாதிக்கு ரூ.6 லட்சத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளதாகவும், எனக்கு வழக்கு விபரம் தெரியாது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். நான் வாதியை பார்க்கவும் இல்லை, பேசவும் இல்லை என்றாலும் பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசல் பத்திரம் கேட்டபோது வாதி தர மறுத்ததால் பிரதிவாதிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் தெரியாது. பிரதிவாதிகளின் தகப்பனார் வாதிக்கு ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் தெரியாது. பிரதிவாதிகள், வாதிக்கு ரூ.5 லட்சம் கொடுத்து, தங்கள் தகப்பனார் எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்தார்கள் என்றால் தெரியாது. பிரதிவாதிகள், வாதியிடம் ரூ.6 லட்சம் தாவா ஈடுகடன் எழுதிக்கொடுத்தது தெரியுமா என்றால் தெரியாது.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 13.03.2024.

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.